22.03.2022
அசல் வழக்கு எண்: 299/2014

பி.வா.சா.1 சாட்சி குமார் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி நிறுவனத்தில் எத்தனை வருடமாக பணிபுரிந்து வருகிறேன் என்று கேட்டால் 30 வருடம் பணிபுரிந்து எனது நிறுவனத்தால் மேலும் பணி நீட்டிப்பு செய்யப்பட்டு தொடர்ந்து பணிபுரிந்து வருகிறேன். ஓய்வு பெற்ற பின்பு சிறிது நாட்கள் கழித்து பணி நீட்டிப்பு செய்தார்களா வேலையில் இருக்கும் போதே என்னை பணி நீட்டிப்பு செய்தார்களா என்று கேட்டால் வேலையில் இருக்கும் போதே பணி நீட்டிப்பு செய்தார்கள். நான் வகிக்கும் பதவியானது பொது மேலாளர், நிதி என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளதில் பொது மேலாளர் என்ற பதவியில் வேறு என்ன என்ன பிரிவுகளில் பொது மேலாளர் பதவி உள்ளது என்று கேட்டால் பொது மேலாளர் உற்பத்தி, பொதுமேலாளர் தரம், பொது மேலாளர் யூனிட் என்று உள்ளது. நிர்வாகத்திற்கு என்று தனி பொது மேலாளர் இல்லை என்று சொன்னால் சரிதான். நிர்வாகத்திற்கு முதன்மை செயல் அலுவலர்(CEO) மட்டுமே நிர்வாகத்தை பார்த்து கொள்வார். நிதியை பொறுத்தவரை என்னுடைய பணிகள் என்ன என்ன என்று கேட்டால் கம்பெனியின் வரவு, செலவு கணக்கு, வருமானம் மற்றும் வரி சம்பந்தப்பட்டது, வழகக்கு சம்பந்தப்பட்டது ஆகியவை என்னுடைய பொறுப்பில் உள்ளது. நிறுவனம் சம்மந்தமாக எத்தனை வழக்குகள் என்னுடைய மேற்பார்வையில் உள்ளன என்று கேட்டால் 30 வழக்குகள் உள்ளது. தற்போது சாட்சி அனைத்து வழக்குகளும் என்னுடைய மேற்பார்வையில்தான் உள்ளது என்று கூறுகிறார். எந்த எந்த நீதிமன்றங்களில் நடக்கிறது என்று கேட்டால் மதுரை மாவட்ட நீதிமன்றம் வளாகத்தில் மதுரை JM5 நீதிமன்றத்திலும்,

கூடுதல் சார்பு நீதிமன்றத்திலும், திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும், வாடிப்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும், மணப்பாறை சார்பு நீதிமன்றத்திலும் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையிலும் வழக்குகள் நடைபெற்று கொண்டிருக்கிறது.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி பி.வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).